MC.NO.11/2023 Page No.
DATE:22-08-2025
P.W.1
SUDHA

**<u>சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை:</u>**

2 ஆண்டுகளுக்கு முன்பாகஎதிர் மனுதாரர் வீட்டை விட்டு வந்து விட்டேன். 9 பவுன் நகை மற்றும் வீட்டில் இருந்த 5,00,000 பணம் எடுத்து குமார் உடன் வந்து விட்டேன் என்றால் சரியல்ல. என் கணவரின் மாதம் வருமானம் 65,000 இருக்கும் அது அல்லாது மாதம் 5000 சீட்டு பணம் நடத்திவருகிறார். ஒரு கோடி மதிப்புள்ள என் வீட்டிற்கு ஆக எதிரி மனுதாரர் எவ்வளவு லோன் செலுத்துகிறார் என்றால் தெரியாது. என் மகன் மகள் படிப்பிற்கு மற்றும் என் கர்ப்பபை பிரச்சனை சம்பந்தமாக மாதம் 50,000 செலவு செய்கிறார் என்றால் சரியல்ல. 500000 ரூபாய்காக ஏகநாதன், பிரகாஷ்,.யுவராஜ், தனசெழியன், ஸ்ரீராம், அஞ்சலி ஆகியோரிடம் தலா 500000 கடன் பெற்று அதற்கான தொகை செலுத்துகிறார் என்றால் சரியல்ல.எதிரி மனுதாரர் பெற்ற கடன் செலுத்துவதற்கு பணம் பற்றவில்லை என்றால் சரியல்ல. என் மகனுக்கு 2 வருடங்களுக்கு முன்பாக பைக் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் தற்பொழுது தாய் தந்தை வீட்டில் வசிக்கிறேன். சென்னையில் வசிக்கிறேன். திருமண நாளிலிருந்து என் கணவர் தான் உணவு , உடை, இருப்பிடம் அவர் தான் பார்த்து கொண்டார் என்றால் சரிதான். கடன் திரும்ப செலுத்தவும் என் பேரில் உள்ள வீட்டிற்கு லோன் கட்டவதற்கு வருமானம் செலவாகிவிடும் என்றும் தற்போது ஜீவனாம்சம் கொடுக்க பணம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி மனுதாரரின் மூட்டு வலி, இதயம் பிரச்சனை சர்க்கரை நோய், ஆகியவற்றை பார்த்து கொள்ள பணம் இல்லை என்றால் சரியல்ல. கடந்த மாதம் இதய நோயால் பாதிக்கப்படும் போது என்னிடம் யாரும் சொல்லவில்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 22.08.2025 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU
Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.